யாழ்நகரில்
தரமான
A/L
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, Jaffna.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

A/L 88 விஞ்ஞான
வகுப்புக்கள்
I ஆம், II ஆம் பிரிவுகள்
நடைபெறுகின்றன
III ஆம் பிரிவு
ஆரம்பமாகின்றன.
விபரங்கட்கு:-
New Master
Institute
B.M.C. Lane, Jaffna

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ ஆடி மீ 5 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 13 (21-07-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY சுதிர்:- 209

ஒரு மாத காலத்திற்குள்

# 251 தமிழ்க் கைதிகள் நீதிமன்றில் ஆஜராவர்

## அரசு கொடுத்த பதிலில் உறுதி; இதே வேளை பாதுகாப்பும் அதிகரிப்பு

— அலுவலகச் செய்தியாளர்: பி. வனிதராஜன் —

யாழ்ப்பாணம், ஜுலை 21

வெலிக்கடைச் சிறைச்சாலையில், வருடக்கணக்காக விசாரணை இன்றித் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 251 தமிழ்க் கைதிகளும் ஒரு மாத காலத்திற்குள் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படலாம்.

சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு கொடுத்த பதில் அறிக்கையில் அரசாங்கம் அதற்கான உறுதி மொழியை வழங்கியிருக்கிறது.

சில கோரிக்கைகளை முன்வைத்து அவை நிறைவேற்றப்படா விட்டால், தாம்சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தமிழ்க் கைதிகள் அரசுக்கு முன்னெச்சரிக்கை விடுத்திருந்தனர்.

தமிழ்க் கைதிகளின் கோரிக்கைகளுக்கு அரசு பதிலனுப்பியுள்ளது.

தமிழில்

சிங்களத்தில் அனுப்பிய பதிலை தமிழ்க் கைதிகள் திருப்பி அனுப்பியதைத் தொடர்ந்து, பதிலின் தமிழ் மொழிபெயர்ப்பு, கடந்த வியாழக்கிழமை தமிழ்க் கைதிகளுக்கு வழங்கப்பட்டது.

அரசின் பதில் குறித்து ஒருவாரத்தில் முடிவைத் தெரிவிப்பதாக தமிழ்க் கைதிகள் சிறைச்சாலை உயர் அதிகாரிக்குத் தெரிவித்துள்ளனர் என்று அறியவருகிறது.

அரசின் பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

★ ஒரு மாத காலத்தினுள் சந்தேக நபர்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

21—07—1986
திங்கட்கிழமை

சுபநேரம்:
12-01 முதல் 01-31 வரை
ராகுகாலம்:
07-31 முதல் 09-01 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பூரணை விரதம்
பட்டினத்தடிகள் குரு பூஜை

## தினமும் வலம் வரும் விமானம்

யாழ்ப்பாணம், ஜுலை 21

யாழ் நகரை கடந்த மூன்று தினங்களாக பச்சை நிற பெட்டி அமைப்பைக் கொண்ட விமானம் ஒன்று வட்டமிட்டுத் திரிகின்றது.

தினமும் மாலை ஆறு மணி அளவில் மண்டைதீவு பக்கமாக இருந்து வரும் இந்த விமானம் கோட்டை இராணுவ முகாம், மண்டைதீவு இராணுவ முகாம் யாழ் பண்ணை, ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசத்திற்கு மேலாக வட்டமிட்டுச் செல்கின்றது. (உ-10)

முச்சந்தி முரளி



எங்கா புவத், றேடியோ, ரூபவாஹினி முக்கூட்டுச் செய்திச் சேவை போதாது என்டு இப்ப தமிழ்ப் பகுதிக்கென்டு தனியார் "ஹெப்புவத்" சேவை ஆரம்பிச்சிருக்கினம் போல......

# 2 ரோந்து படகுகள் மூழ்கடிக்கப்பட்டன

## ஈ. பி. ஆர். எல். எவ். தாக்குதலில் 17 சிப்பாய்கள் மாண்டனர்

லண்டன், ஜுலை 20

யாழ் குடாநாட்டை ஒட்டிய கடல்பகுதியில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போராளிகள் நடத்திய தாக்குதலில் இலங்கை பாதுகாப்பு படையின் இரண்டு ரோந்துப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன; அதில் வந்த 17 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

சென்னையில் உள்ள ஈ பி ஆர்.எல் எவ். அலுவலகம் இதனைத் தெரிவித்ததாக பி பி ஸி நேற்று அறிவித்தது.

சனிக்கிழமை இந்தச் சம்பவம் நடைபெற்றதாகவும்—

இந்தச் சம்பவம் குறித்து இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் எதுவும் தெரிவிக்கவில்லை எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (உ)

# கள்ளிச்சை தாக்குதலில் 15க்கும் அதிகமான சிப்பாய்கள் பலி

## புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 21

கள்ளிச்சை, வடமுனை முகாமில் இருந்து நேற்று புறப்பட்ட நூறுக்கும் அதிகமான இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 15 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்றுக்காலை கள்ளிச்சை முகாமில் இருந்து நடைபவனியாக வெளிக்கத்தை முகாமிற்கு இராணுவம் சென்று கொண்டிருந்த சமயம் நாம் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் 15 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

இவர்களுக்கு உதவு வதற்காக வெலிக்கந்தை முகாமில் இருந்து வாகனங்களில் வந்த மேலும் நூறுக்கும் அதிகமான இராணுவத்தினரை நாம் இடைமறித்து தாக்கியதில் இராணுவத்தினர் தரப்பில் மேலும் பலர் உயிரிழந்தனர்.

காயப்பட்டவர்களையும், இறந்தவர்களையும் ஏற்றிச் செல்வதற்காக மூன்று தடவைகள் தரையிறங்க முற்பட்ட ஹெலிகொப்டர் எமது தாக்குதல்களினால் பின்வாங்கியது.

மேலும் நிலைகொண்டு சமர்புரிய இயலாத நிலையில் பாரிய இழப்புக்களுடன் இராணுவம் பின்வாங்கியது.

இத்தாக்குதலின்போது எமது தரப்பில் எதுவித மான இழப்புக்களும் இல்லை. (உ-7)

## ஹெலியிலிருந்து பிரசுரங்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 21

நேற்று யாழ்ப்பாணம் கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் ஹெலிகொப்டரிலிருந்து ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. (உ-7)

# நாளை ஹர்த்தால்

## அனுஷ்டிக்க கோரிக்கை

முஸ்லிம் மக்கள் சார்பில் பிரசுரம்

யாழ்ப்பாணம், ஜுலை 21

யாழ் முஸ்லிம் மக்களின் ஏற்பாட்டில் நாளை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது. ஊர்வலம் ஒன்றும் நாளை நடைபெறும்.

கடந்த மாதம் 24 ஆம் திகதியன்று யாழ் முஸ்லிம் பகுதியில் நடந்த குண்டு வீச்சுப் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்தும்—

அச்சம்பவம் குறித்து நீதி கேட்டு, நியாயமான தீர்ப்பை வழங்குமாறு கோரியுமே இந்த ஹர்த்தாலும் ஊர்வலமும் இடம் பெறும் என்று யாழ் முஸ்லிம் பொது மக்களின் பெயரில் விடுக்கப்பட்ட பிரசுரம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இனப்பாகுபாடு காட்டாது தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஊர்வலத்தில் பங்குபற்றும்படி அந்தப்பிரசுரத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஊர்வலம் செவ்வாய் காலை 9 மணிக்கு புதிய சோனக தெரு பள்ளிவாசல் முன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-எ)

# அலஸ் தோட்டத்தில் ஸ்கவுட் கார் தூக்கிவீசப்பட்டது

யாழ்ப்பாணம், ஜுலை 21

திருகோணமலை அலஸ் தோட்டத்தில் கடந்த சனிக்கிழமை நடைபவனியாகவும், வாகனங்களிலும் சென்ற சிப்பாய்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தியதில் ஸ்கவுட் கார் ஒன்று தூக்கிவீசப்பட்டது.

அதில் வந்த சிப்பாய்களும், அதன் அருகே நடந்து வந்தவர்களும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

கடந்த சனிக்கிழமை திருகோணமலையிலுள்ள கோட்டை இராணுவ முகாமிலிருந்து இரண்டு ஸ்கவுட் கார்களிலும், இரண்டு ட்றக் வண்டிகளிலும், ஒரு 'எல்வ்' ட்ரக்கிலுமாக இருநூறுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் நடைபவனியாகச் சென்றனர்.

அலஸ்தோட்டம் வழியாக இவர்கள் சென்ற போது தரைக் கண்ணி வெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் சிப்பாய்களுக்கு உதவியாக ஹெலிகொப்டர் ஒன்றும் தாக்குதல் நடத்தியது. அது இருதடவை தரையிறக்கப்பட்டு காயப்பட்டவர்களை ஏற்றிச் சென்றது.

மேலும் தரை இறங்க விடாது எம்மவர்கள் தாக்கியதில் ஹெலிகொப்டர் பின்வாங்கியது.

அங்கு சிப்பாய்களுடன் தொடர்ந்து நாம் சமர் புரிந்து வருகிறோம்.

இந்தத் தாக்குதல்களின் போது எமது தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை.

இதேவேளை நகரில் இருந்து கார் ஒன்றில் வந்த தமிழர் ஒருவரை சிப்பாய்கள் சுட்டுக் கொன்று காருடன் சேர்த்து எரித்துள்ளனர். (உ-10)

# வருகிறார்கள், வருகிறார்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள்!

## நேற்றும் 2 கப்பல்களில் வடக்கே வந்தனர்!!

யாழ்ப்பாணம், ஜுலை 21

மேலும் பொலீஸ் கமாண்டோ படையினர் இரண்டு கப்பல்களில் நேற்று நண்பகல் வட பகுதி வந்து சேர்ந்தனர்.

காரைநகர் கடல் பகுதியை வந்தடைந்த இரண்டு கப்பல்களுக்கும் இரண்டு ஹெலிகொப்டர்கள் பாதுகாப்பு வழங்கின.

சுமார் 300 படையினர் பெனியன், சாரம் அணிந்தபடியும் அரைக் காற்சட்டை பெனியன் அணிந்தபடியும் வந்து இறங்கினர்.

இவர்கள் வந்த கப்பல்களில் இலங்கைக் கொடி பறக்கவில்லை என்று அறிய வருகின்றது.

இவர்களில் ஒரு பகுதியினர் பலாலி முகாமுக்கும் இன்னொரு பகுதியினர் மண்டைதீவு முகாமுக்கும் ஹெலிகொப்டர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். (உ-எ-6)

## பஸ், லொறி சேவைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 21

நேற்று முதல் தனியார் பஸ்களும் லொறிகளும் தொழும்பு சேவையில் ஈடுபட்டன.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலைகளுக்கு வெள்ளியன்று செல்லாதீர்

## ஆசிரியர்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 21

எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று பாடசாலைகளுக்குச் செல்லாமல் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து அன்றைய தினத்தை இனப்படுகொலைக்கு எதிரான எதிர்ப்பு நாளாக அனுஷ்டிக்குக.

இப்படி ஆசிரியர்களிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறிலங்கா அரசு ஈழ மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இனப்படுகொலை அண்மைய நாளில் என்றுமே இல்லாதவாறு அதிகரித்துள்ளது.

இவ்வினப்படுகொலைகளுக்கெதிராக ஈழப் பொது மக்கள் தமது ஒன்றிணைந்த வன்மையான எதிர்ப்பினைச் சிறிலங்கா பேரினவாத அரசுக்குக் காட்டவேண்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பலாலி ராணுவ முகாமில் நவீன சத்திர சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணம், ஜுலை 21

பலாலி ஆயுதப்படை முகாமில் நவீன வசதிகள் அடங்கிய முதலுதவி சத்திர சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தேடுதல் நடவடிக்கை, நேரடி மோதல் ஆகியவற்றில் படுகாயம் அடையும் சிப்பாய்களுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளித்துக் காப்பாற்றவே இந்த முதலுதவி சத்திர சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

காயங்களுக்கு ஆளாகும் சிப்பாய்கள் முன்னர் விமானம் மூலம் அனுராதபுரம், கொழும்பு பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் அப்படிக் கொண்டு போகும் போது இடை வழியில் உயிர்ச்சேதம் ஏற்பட்டு விட்ட சம்பவங்கள் பல இடம் பெற்றன.

அவற்றைக் கூடுமான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலையில் பாரிய கப்பல்

யாழ்ப்பாணம், ஜுலை 21

பேசாலைக் கடலில் கறுப்பு நிறமான பாரிய கப்பல் ஒன்று நிலை கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த இரண்டு தினங்களாக பேசாலைக் கரையில் இருந்து ஆயிரம் யார் தூரத்தில் இக்கப்பல் நிற்பதாகவும்—

இந்தக் கப்பலைச் சுற்றி சிறிய படகுகளில் ஆயுதப் படையினர் காவல் புரிவதாகவும் தெரியவருகிறது.

இதனால் அச்சம் கொண்ட இப் பகுதி மீனவர்கள் கடந்த இரண்டு தினங்களாக கடலுக்கு செல்வதை நிறுத்தியுள்ளனர். (உ-10)

## பூநகரியில் நடைபவனி

யாழ்ப்பாணம், ஜுலை 21

பூநகரிப் பகுதி வீதிகளில் நேற்று கறுப்புச் சட்டையினர் நடைபவனி மேற்கொண்டனர்.

நேற்று நண்பகல் பதினொரு மணி தொடக்கம் சுமார் ஒருமணி நேரம் பூநகரியில் இருந்து நாவற்காடு சுட்டை வரை இவர்கள் நடமாடினர்.

இதனால் இப்பகுதியூடாக செல்லும் போக்குவரத்துக்கள் சிலமணி நேரம் தடைப்பட்டிருந்தன. (உ-10)

# கூட்டுறவு கிளைகளை வெள்ளியன்று பூட்டுக

## துக்கம் அனுஷ்டிக்கவும் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 21

எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று கூட்டுறவுச் சங்கங்களைப்பூட்டி, கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு, அன்றைய தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு தேசிய கூட்டுறவுச் சபை வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுவதையும் அவர்களின் உடைமைகள் சேதப்படுத்தப்படுவதையும் கண்டிக்குமுகமாகவே இத்துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கடந்த 19 ஆம் திகதி தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற ப. நோ. கூ. சங்கத் தலைவர்களின் கூட்டத்தில் இது தொடர்பாக சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதேவேளை சங்கப் பிரதேசங்களில் கண்டனக் கூட்டங்களை ஒழுங்கு படுத்தி நடத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ-10)

# மன்னார் தாக்குதலில் 22 சிப்பாய்கள் பலி

## புளொட் விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 21

மன்னார், மதவாச்சி வீதியில் ஆண்டியாபுளியங்குளத்திற்கு அண்மையில் கடந்த 16 ஆம் திகதி நடத்தப்பட்ட இராணுவத்திற்கு எதிரான தாக்குதலில் இருபத்திரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அடம்பனிற்கு சென்று திரும்பிய ரஜரட்டைப் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் மீதே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் எமது தரப்பில் எதுவித சேதமும் இல்லை.

இந்த தாக்குதலிற்கு எமது தயாரிப்பான பி. சி. எம். 85 என்ற புதிய ரக கண்ணி வெடிகளே பயன் படுத்தப்பட்டன.

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

பிரயாண ஒழுங்குகள்

● கனடா
● டென்மார்க்
● சவூதி

(அ) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

(ஆ) சவூதி அரேபியாவுக்குச் செல்ல விரும்புவோர்க்கு 22, 23, 24 ஆம் திகதிகளில் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

(இ) கனடா, டென்மார்க், சவூதி ஆகிய நாடுகளுக்குப் பாஸ்போட், முற்பணம் கொடுத்தவர்கள் 21 ஆம், 22 ஆம், 23 ஆம் திகதிகளில் காரியாலயத்தில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தொடர்பு:
N. BALA
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பஸ்வழி இலக்கம்:
764, பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி கல்விப் பணிமனை பழைய இடத்தில்

## மன்சூர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 21

கிளிநொச்சி கல்விப் பணிமனை மீண்டும் பழைய கட்டடத்தில் இயங்கத் தொடங்கும்.

அதற்கான ஆயத்தங்களைத் தான் மேற்கொண்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் கிளிநொச்சிப் பிரஜைகள் குழுத் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

சேதமடைந்த கல்விப் பணிமனைக் கட்டடம் ஐம்பதினாயிரம் ரூபாசெலவில் திருத்தப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சிக் கல்விப் பணிமனை தற்சமயம் தற்காலிகமாக பனையில் இயங்கிவருகிறது.

அசம்பாவிதங்கள் காரணமாக இயங்காத பாடசாலைகளில் படித்து வந்த மாணவர்களை, இயங்கும் பாடசாலைகளில் சேர்ந்து படிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது. ஆசிரியர்களும் இயங்கும் பாடசாலைகளுக்குத் தற்காலிக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

மூன்றும் தவணை ஆரம்பமாகும்போது இருக்கும் சூழ்நிலைக்கு ஏற்ப ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இப்படி கல்விப் பணிப்பாளர், பிரஜைகள் குழுவிடம் தெரிவித்தார். (எ)

# தீவுப் பகுதிக்காக குரல் கொடுக்க எவரும் இல்லையே

## கொள்ளை கண்டனக் கூட்டத்தில் உரை

வல்வெட்டித்துறை ஜூலை 21

தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களில் நெருக்கடிகள் நிறைந்துள்ள இவ்வேளையில் தீவுப்பகுதி மக்கள் படும் இன்னல்களை உலக அரங்கம் இப்பகுதி மக்களுக்காகக் குரல் கொடுக்க எவரும் இல்லாததே ஆகும்.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. நாகராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை வர்த்தகர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் இறுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வாரம் வல்வெட்டித்துறை கடை வீதியிலுள்ள வசந்தா ஸ்ரோர்ஸ் என்னும் வர்த்தக ஸ்தாபனத்தில் நடந்த கொள்ளையைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை சிவன் கோவிலில் ஆரம்பித்த புனித செபஸ்தியார் ஆலய முன்றலில் நிறைவுற்ற இவ்வூர்வலத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்திற்கு வர்த்தக சங்கத் தலைவர் தலைமை வகித்தார்.

திரு நாகராசா பேசுகையில்

எங்கள் துன்பங்களுக்காக நாங்களே போராட வேண்டிய கட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். மலையகத் தமிழன் தன்னைக் காத்து நிற்க தற்காப்பு யுத்தத்தை ஆரம்பித்துள்ளான்.

அதைப்போல நாமும் எம்மைத் தயார்படுத்த வேண்டும். எங்கள் மத்தியில் நடைபெறுகின்ற கொள்ளைகளைக் கண்டு பிடிக்க நாங்கள் முனைய வேண்டும் என்றார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் நிறுவனங்களின் உறுப்பினர் பலரும் இக்கூட்டத்தில் உரையாற்றினார்கள். (இ-16)


# பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- ஜேர்மன்
- பிரான்ஸ்
- டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், விசா, பொன்ட், (BOND) ரிக்கட்

ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**INTERSUN GROUP**

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.


# யாழ்- மட்டக்களப்பு பஸ் சேவை தொடர்ந்து நிறுத்தம்

## அரச ஊழியர் பெருமளவு பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் — மட்டக்களப்பு இ.போ.ச. பஸ்சேவை கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மட்டக்களப்பில் உள்ள யாழ் அரச ஊழியர்களும், யாழ்ப்பாணத்தில் உள்ள மட்டக்களப்பு அரச ஊழியர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

ஒரு மாதத்துக்கு முன்னதாக யாழ்ப்பாணடிப்போவைச் சேர்ந்த பஸ்களே மட்டக்களப்பு — யாழ்ப்பாணச்சேவையை நடாத்தி வந்தன

எனினும் கடந்த சில காலமாக ஏற்பட்டுவரும் இராணுவக் கெடுபிடிகள் காரணமாகவும் வடபகுதியில் ஏற்பட்டுவரும் டீசல் தட்டுப்பாடு காரணமாகவும் மட்டக்களப்பு பஸ்சேவைகள் நிறுத்தப்பட்டன. (இ-10)

# ‘புளொட்’டுடன் சேர்ந்து சோஷலிச அரசு அமைப்பதே ‘சிவப்பு வீரர்’ அமைப்பின் நோக்கம்

## ஹென்றி பெரேரா வழக்கில் தகவல்

கொழும்பு, ஜூலை 21

மார்க்ஸிய கொடியின் கீழ் சோஷலிச அரசு ஒன்றைத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் சேர்ந்து அமைப்பதுதான் ஹென்றி பெரேராவின் தலைமையிலான சிவப்பு வீரர்கள் அமைப்பின் நோக்கம்.

இப்படி ஹென்றி பெரேரா வழக்கில் சாட்சியமளிக்கையில் பொலீஸ் அதிபர் சந்திரா ஜெயவர்த்தன சொன்னார்.

கைக்குண்டுகளும் வெடிமருந்துகளும் வைத்திருந்ததாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உடுவேகே ஹென்றி, லெனின் அல்லது ரட்ணம் அல்லது விஸ்வன் என்பவர் மீது இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது

இவர்மீதான வழக்குத் தற்சமயம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யு. சேனநாயக்கா முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வருகிறது

பொலீஸாருக்கு எதிரி அளித்த வாக்குமூலம் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதா? என்ற (வோயர் டயர்) விசாரணையில் வாக்குமூலத்தைப் பதிவு செய்ததாகக் கூறப்படும் பொலீஸ் அதிபர் சந்திரா ஜெயவர்த்தன சாட்சியமளித்தார்.

அவர் சொன்னதாவது:

ஹென்றி பெரேரா கைதானதைத் தொடர்ந்தே சிவப்பு வீரர் அமைப்பு இயங்குவது தெரியவந்தது.

எதிரியை விசாரணை செய்தபோது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் இணைந்து மார்க்ஸியக் கொடியின் கீழ் சோஷலிச அரசு ஒன்றை நிறுவும் திட்டம் வெளிவந்தது

எதிர்தரப்புச் சட்டத்தரணி: மார்க்ஸியத்துக்கும் சோஷலிசத்துக்கும் இடையேயான வேறுபாடு என்ன?

நீதிபதி: இது நீதிமன்றம்; கருத்தரங்கு அல்ல. இக்கேள்வியை அனுமதிக்க முடியாது

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது (உ-எ)

## சைக்கிள்களை மக்கள் விடுதலைப் படை மீட்டது

யாழ்ப்பாணம் ஜூலை 21

திருநெல்வேலியில் களவாடப்பட்ட சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் மக்கள் விடுதலைப்படையால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் விடுதலைப் படை அலுவலகத்தில் வைக்கப்பட்டு உள்ளன.

C 50 மோட்டார் சைக்கிள் ஒன்றும் 3 ஏசியா சைக்கிள்களுமே மீட்கப்பட்டவை ஆகும்.

இவற்றைப் பறிகொடுத்தவர்கள் தகுந்த ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சைக்கிள்களைக் களவாடியவரான இரத்தின கோபால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். (இ)

## புற்றுநோய் அறிவுப் போட்டி

பலாலி, ஜூலை 21

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான புற்றுநோய் அறிவுப் போட்டி ஒன்றை வட மாகாணப் புற்றுநோயாளர் சங்கம் இவ்வருடம் நடத்தும்

ஜி. சி. ஈ. சாதாரண தர உயர்தர மாணவர்கள் கலந்து கொள்ளக் கூடிய இப்போட்டியில் சகல பாடசாலைகளையும் கலந்து கொள்ளுமாறு கல்வித் திணைக்களம் சுற்று நிருபம் ஒன்றின் மூலம் அதிபர்களைக் கேட்டுள்ளது

முதலாவது பரிசாக ரூபா 500/- உம் இரண்டாவது பரிசாக ரூ 250/- உம் மூன்றாவது பரிசாக ரூ 100/ உம் வழங்கப்படும்.

ரூ 25/- கொண்ட ஐந்து பரிசில்களும் வழங்கப்படும் (இ-119)

## சனசமூக நிலையம் நிதி உதவி

உடுப்பிட்டி ஜூலை 21

கடந்த மாத பிற்பகுதியில் பருத்தித்துறைப் பகுதியில் நடைபெற்ற ஷெல் தாக்குதலில் மரணமடைந்த இருவருக்கு மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சன சமூக நிலையம் நிதி உதவி வழங்கியுள்ளது

சம்பவத்தின் போது சாளம்பையைச் சேர்ந்த திரு. சங்கரப்பிள்ளை சிவக்கொழுந்து, செல்வி தமிழ்ச் செல்வி பேரம்பலம் ஆகியோரே மரணமானவர்கள் ஆவர். (இ-157)

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் செப்டெம்பர் 3 ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளன (உ-எ)

# சங்கானையில் விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 21

சங்கானையில் விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கு சங்கானை - பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறும்

சுழிபுரம் “ரட்ணம்ஸ் எலக்றிக்கல்ஸ் குறூப்” ஸ்தாபனத்தினரின் ஆதரவில் எதிர்வரும் புதன் கிழமை காலை ஆரம்பமாகும் இக்கருத்தரங்கிற்கு திரு. பொ. செல்வரத்தினம் தலைமை வகிப்பார்

“சிவதர்ம வள்ளல்” திரு க. கனகராஜா, யாழ் சமூக சேவைகள் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம், விவசாய இணை உதவிப் பணிப்பாளர் திரு ச. கிருஷ்ணபிள்ளை, யாழ் மருத்துவ பீட விரிவுரையாளர் திரு டி குணராஜசிங்கம், யாழ் அபிவிருத்திச் சபை மின்சார அத்தியட்சகர் திரு பொ. ஜெயரத்தின சிங்கம், போராசிரியர் கா சதாசிவம்பிள்ளை, யாழ் பயிர்காப்புறுதிப் பணிப்பாளர் திரு க சிவகுரு, பெரும்பாக உத்தியோகத்தர்கள் திரு. பி. குழைப்பிள்ளை. திரு. குழந்தைவேல், விவசாய போதனாசிரியர் திரு ச தம்பிராஜா, பயிர் செய்கை உத்தியோகத்தர் திரு ஜி சிதம்பரநாதன், மறுமலர்ச்சி மன்ற பொதுச் செயலாளர் திரு செ யோ செல்வராஜா ஆகியோர் உரையாற்றுவார்கள்.

கருத்தரங்கில் கால்நடைப் பராமரிப்பு, விதை தானியம், உரம், கிருமிநாசினி ஆகிய பல்வேறு துறைகளில் எழும் பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்கப்படும்

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவர்களின் விவசாய கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். (இ)

## இரு மீனவரை காணவில்லை

தாளையடி ஜூலை 21

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களைக் காணவில்லை

பருத்தித்துறை கிழக்கிலுள்ள உடுத்துறை வாசிகளான இவ் இரு மீனவர்களும் பொக்கனை என்னுமிடத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்றுள்ளனர்கள்.

# சனசமூக நிலையங்கள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்

கரவெட்டி, ஜூலை 21

‘கிராமிய எழுச்சிக்கும் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும் சன சமூக நிலையங்கள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்

யாழ் அபிவிருத்திச் சபை நெல்லியடி உப அலுவலக பொதுசன நூலக மண்டபத்தில் சன சமூகங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த. பாஸ்கரன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு சன சமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது

திருமதி. பாஸ்கரன் தொடர்ந்து பேசுகையில்

கிராம அபிவிருத்தியை மேம்படுத்தக் கூடிய விவசாயச் செய்கை, வீட்டுத் தோட்டம் போன்றவற்றை ஊக்குவிக்க சன சமூக நிலையங்கள் உதவி அளிக்கவேண்டும் என்றார்.

தலைவர் தனது தலைமையுரையில், சனசமூகங்களின் உறுப்பினர்கள் சேவை மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

யாழ் அபிவிருத்திச் சபை உடுப்பிட்டி உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் பேராசிரியர் திரு ம கணேசலிங்கம், திரு. ச செந்தூர்ராஜா, திரு எஸ். செல்லையா, திரு. கொ சத்தியமூர்த்தி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (இ-70)

## கிளிநொச்சியில் தொழுநோயாளர் கிளினிக்

யாழ்ப்பாணம், ஜூலை. 21

கிளிநொச்சி மாவட்டத்தில் மாதம் ஒரு தடவை நடைபெறும் தொழுநோயாளர் கிளினிக் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பரந்தன் சந்தியில் உள்ள மலேரியா தடை இயக்க அலுவலகத்தில் நடைபெறும்

இப்படி தொழுநோய்த்தடுப்பு சுகாதார அதிகாரி திரு. மு. குணரத்தினம் அறிவித்துள்ளார்.

வன்செயல்கள் காரணமாக மே, ஜூன் மாதங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் வசித்து வரும் தொழுநோயாளர்களுக்கான கிளினிக் நடைபெறவில்லை

ஒவ்வொரு மாதமும் 3 ஆவது திங்கட்கிழமை இந்தக் கிளினிக் நடைபெற்று வந்தது.

ஜூலை 21 இல் இருந்து மீண்டும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# இலங்கையில் இயங்கும் பிரிட்டிஷ் கூலிப்படை

## லண்டனில் சிவ்சங்கர் பேச்சுவார்த்தை

லண்டன், ஜூலை20

இலங்கைத் தமிழர் பகுதியில் அரசபடையினருடன் சேர்ந்து பிரிட்டிஷ் கூலிப்படையினர் இயங்குவது குறித்து இந்தியா முதல் தடவையாக பிரிட்டனுடன், அமைச்சர் மட்டத்தில் பேச்சுக்கள் நடத்தியது.

அண்மையில் லண்டன் சென்ற இந்த இந்திய வெளியுறவு அமைச்சர் திரு பி. சிவ் சங்கர், பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜோவ்ரி ஹோவுடன், இலங்கையில் பிரிட்டிஷ் கூலிப் படையினர் இயங்கி வருவது பற்றி உத்தியோக ரீதியில் பேச்சுக்கள் நடத்தினார்

கூலிப்படையினர் தனிப்பட்ட ரீதியில் இயங்குகின்றனர். அவர்களுக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் தொடர்பு இல்லை. அவர்கள் மீது பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாடு இல்லை - இப்படி பிரிட்டிஷ் அமைச்சர் சொன்னார்

அரபு நாடுகளில் அம்மான், பேரூட் ஆகிய தலைநகரங்களில் உள்ள பிரிட்டிஷ் தூதரகங்களைப் பாதுகாக்க இக்கூலிப் படையினரைத் தான் பிரிட்டிஷ் அரசு அமர்த்தியுள்ளது என்று இந்திய அமைச்சர் சிவ் சங்கர், பிரிட்டிஷ் அமைச்சருக்கு நினைவூட்டினார்

இதனிடையில் பிரிட்டிஷ் - இந்திய உறவு நல்ல நிலையில் இல்லை என்று லண்டனில் இருந்து வெளியாகும் ‘ஒப்சேர்வர்’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜூனில் அமைச்சர் சிவ்சங்கர் லண்டன் வந்து சென்ற பின்னர், இரு நாடுகளின் உறவுகள் மேலும் மோசம் அடையத் தொடங்கி இருப்பதாக அப்பத்திரிகைச் செய்தி கூறியது. (உ-எ)

## சிறுமியும் மரணம்

திருகோணமலை, ஜூலை21

திருகோணமலை நகரில் ஊர்காவல் படையினர் இம்மாதம் பத்தாம் திகதி அதிகாலை நடத்திய தாக்குதலில் படுகாயம் அடைந்திருந்த 12 வயது வனஞ்சனிதேவி பேராதனை ஆஸ்பத்திரியில் மரணமானார்

இத்தாக்குதலில் இச்சிறுமியின் தாய், தந்தையான தம்பிஐயப்பா தம்பதிகளும் இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகி உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. (உ-எ-150)

# திருகோணமலையில் அன்னையர் ஊர்வலம்

திருகோணமலை ஜூலை21

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்கள் பிள்ளைகளை விடுவிக்கக் கோரி சுமார் 150 தாய்மார்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஊர்வலமாகச் சென்று திருகோணமலை அரசாங்க அதிபரைச் சந்தித்து முறையிட்டனர்.

ஜூன் 24இல் கைதான இந்த இளைஞர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்று அவர்கள் அரச அதிபரிடம்மேலும் தெரிவித்தனர்.

விரைவில் அவர்கள் விடுதலையாவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அரச அதிபர் உறுதியளித்தார். (உ-எ150)

## கருத்தரங்கு.

அஞ்சல் சேவையின் வளர்ச்சி, நாகரிகத்தின் பிரதிபலிப்பு. அஞ்சல் சேவைக்கு வேறு எந்த சேவையும் மாற்றீடாக முடியாது.

இப்படி அஞ்சல், தொலை தொடர்பு சேவையாளர் சங்க மட்டக்களப்புப் பிரமுகர் திரு எஸ். சிவராஜசிங்கம் மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரியில் நடந்த வர்த்தக, பொருளாதார, கணக்கியல் சேவைக்கான பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றிப் பேசுகையில் சொன்னார்.

மாவட்ட வர்த்தக கல்வி அதிகாரி திரு. எஸ். தெய்வநாயகம் தலைமை வகித்தார். (உ-எ)

# உணவில் தன்னிறைவு காண்பது அவசியம்

## மரம் நடும் விழாவில் உரை

பண்டத்தரிப்பு, ஜூலை21

எந்தக் காலகட்டத்திலும் நாம் உணவில் தன்னிறைவு கொண்டவர்களாகத் திகழவேண்டும். இறக்குமதி உணவில் தங்கும் நாடுகளோ, இனங்களோ தமது சுதந்திரத்தைத் தனித்துவத்தைப் பேணிப்பாதுகாக்க முடியாது என்பது வரலாறு கண்ட உண்மை.

யாழ்ப்பாண விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் திரு ஏ. கிருஷ்ணபிள்ளை இவ்வாறு கூறினார்.

பண்டத்தரிப்பு தென்இந்தியத் திருச்சபை ஏற்பாடு செய்து மரம் நடும் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார். சங்கைக்குரிய சாம் தம்பு அடிகளார் தலைமையில் மரம் நடும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

சிவதருமவள்ளல் க. கனகராசா மரக்கன்றுகளை வழங்கி உரையாற்றினார்.

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. நடத்தும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு அரிச்சுவடிகள் அப்பியாசப் புத்தகங்கள் போன்ற கல்விச் சாதனங்களை அவர் அன்பளிப்புச் செய்தார்.

பண்டத்தரிப்பு விவசாய விரிவாக்க அலுவலர் திரு வை பாலகிருஷ்ணனும் உரையாற்றினார்.

ஆசிரியர் திரு இரத்தின வடிவேல் நன்றி கூறினார்.

தொல்புரம் கமநல சேவை போதனாசிரியர் திரு நா. தம்பிராசாவும் பேராசிரியர் பொ. சதாசிவம்பிள்ளையும் கலந்து [illegible] (இ-120)

## அவருக்கு இப்படி ஒரு கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 21

கொழும்பு செல்லும் வடபகுதி பிரயாணிகளிடம் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாக வடபகுதி இணைப்பதிகாரி பிரிகேடியர் எச். எவ் ரூபசிங்க கவலை தெரிவித்திருக்கிறார்

தம்மைச் சந்தித்த லொறி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளிடமே அவர் இவ்விதம் தெரிவித்தாராம்.

சில பஸ்கள் கொழும்பு செல்ல 500 ரூபா அறவிடுவதாகவும், அப்படி அறவிடப்படும் பஸ்கள் இனிமேல் தடைமுகாம்களில் தடுத்து வைக்கப்படும் என்றும் பிரிகேடியர் [illegible] (அ-5)


விமானச்சிட்டுக்கள். பாஸ்போர்ப் பொண்ட், விசா, ரெலக்ஸ்

CONFIRMATION RE CONFIRMATION

தொலைபேசிச் சேவை ;
23364, 23866

நிப்பொன் ரெவி ரவல்ஸ்
2G, ஸ்ரான்லி வீதி,
கஸ்தூரியார் . ஸ்ரான்லி வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.




# ஆறுமுகம் நவரத்தினம்

ஆறுமுகம் நவரத்தினம் அவர்கள் 20-07-86 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற தங்கமுத்தின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பிராசா, திருமதி குமாரசாமி இரத்தினம்மா ஆகியோரதும் திருமதி சேனாதிராசா அமுதம்மாவினதும் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-07-86 ஞாயிற்றுக்கிழமையன்று நாவற்குழியில் நடைபெற்றன.

சு. மகேந்திரராசா
(ஆசிரியர்)
நாவற்குழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

பிறருக்கு வரும் கல்வி செல்வங்களைக் காணும் பொழுது, பொறாமை இன்றி மகிழ்தலே நன்மனதிற்கு அழகு.

—நாவலர்

உதயன்
உண்மை - விஞ்ஞானம் - நடுநிலைமை
இல. 15 2வது ஒழுங்கை, கின்சார் நிலைய வீதி, யாழ்ப்பாணம், 21-07-86
தொலைபேசி 24805, 22073
த பெ 23

## மீண்டும் கொள்ளைகளா? அனுமதிக்காதீர்!

கிளிநொச்சியைச் சேர்ந்த வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் ஒரே இரவில் ஆறு வீடுகளில் கொள்ளைகள் நடந்திருக்கின்றன. பணமாகவும், நகைகளாகவும் சுமார் எட்டு லட்சம் ரூபா அன்றைய தினம் மட்டும் கொள்ளை இடப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் பணம் சமூக விரோதிகளால் அபகரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியைப் பொறுத்தமட்டில் அது ஒரு பெரும் போர்க்களமாகி, பெருமளவில் பாதிக்கப்பட்ட பிரதேசமாக மாறியிருக்கிறது. நகரப் புறத்தில் மக்கள் நடமாட்டமே இல்லை. பலர் மிகவும் உள்ளே அமைந்திருக்கும் குடியேற்றக் கிராமங்களுக்குக் குடிபெயர்ந்துள்ளனர்.

கிராமப் பகுதிகளுக்கும் இராணுவ அட்டூழியம் பரவுமோ என்ற பயப்பிராந்தியுடன் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்பகுதிகளில் கொள்ளை போன்ற சமூக விரோதச் செயல்களைப் பரவ விடுவது அந்தப் பகுதி மக்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போலாகும்.

கிளிநொச்சி என்று மட்டுமன்றி, தமிழ்ப் பிரதேசம் எதிலுமே கொள்ளைகளை அனுமதிக்க முடியாது. தமிழ் மக்கள் படும் இன்னல்கள் அனைத்தும் அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகள் மூலமும், ஏனைய மறைமுகமான பொருளாதார, வர்த்தகக் கட்டுப்பாடுகள், தடைகள், புறக்கணிப்புகள் மூலமும் தமிழ் மக்களை அணு அணுவாகச் சித்திரவதை செய்து வருகிறது.

கஷ்டத்தின், துன்பத்தின், விரக்தியின் எல்லைகளுக்குத் தள்ளப்பட்டு, வையகத்தில் இந்த வாழ்வு ஏன் என்று எண்ணும் அளவுக்குத் தமிழர்கள் இன்னல் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறார்கள்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் கொள்ளை போன்ற சமூக விரோதச் செயல்கள் தமிழ் மக்கள் வாழ்வை மேலும் பாழ்படுத்திப் பாலைவனமாக்கிவிடும். அவர்களின் மன உணர்வுகளைத் தாக்கி, உடல் நலத்தைக் கெடுத்து அவர்களை நடைப்பிணங்கள் ஆக்கிவிடும்.

அனேகமாக மக்களில் பெரும்பாலானவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுத் தான் பொருள் தேடுகிறார்கள். மிகச் சிலரே பிறர் பணத்தைச் சுரண்டிப் பொருள் ஈட்டுகிறார்கள்.

ஒருவன் கஷ்டப்பட்டுத் தேடிய பணத்தை கொள்ளை அடிப்பது பெரும் பாவம். சுரண்டிப் பொருத்தவர்களின் செல்வத்தைக் கூட அவர்களின் விருப்பமில்லாமல் பலவந்தமாகக் கொள்ளை அடிப்பதை நியாயப்படுத்த முடியாது. வேண்டுமானால் சட்டரீதியாக அவர்களது செல்வத்தில் ஒரு பகுதியை எடுத்து வசதிமற்றவர்களுக்குப் பங்கிடலாம். அது சோஷலிச நடவடிக்கை.

எனவே ஏழையிடம் கொள்ளையடித்தாலும் சரி, பணக்காரனிடம் கொள்ளையடித்தாலும் சரி அது சமூக விரோதச் செயல். கண்டிக்கப்பட வேண்டியது. தண்டிக்கப்பட வேண்டியது.

தமிழ் மக்களுக்கு இப்போது பல வழிகளாலும் போராட்டக் காலம்; சோதனைக் காலமும் கூட. உயிருக்குப் போராட்டம்; வயிற்றுக்குப் போராட்டம்; அரசியல் போராட்டம் பொருளாதாரப் போராட்டம் என்று எல்லா முனைகளிலும் போராட்டமாகவும் சோதனையாகவுமே உள்ளது.

இத்தருணத்தில் எமக்குள் நடக்கும் சமூக விரோதச் செயல்களை அனுமதித்தால் வாழ்க்கையின் விளிம்பிலும் குந்தியிருக்க முடியாது.

சிவில் நிர்வாகம் இயக்கமற்றுப் போயிருக்கும் இவ்வேளையில் புனித இயக்கங்கள், சமூக நலன் விரும்பிகள், சமூக சேவை மன்றங்கள் ஆகியனவே சமூக விரோதச் செயல்களை ஒழிப்பதற்குத் தீவிரமாகச் செயற்பட வேண்டும். அது அவற்றின் தலையாய கடமை.

# ரேகன் ஒரு நவீன ஹிட்லர்

## நிக்கரகுவா தலைவர் ஒட்டேகா உவமானம்

மனாகுவா, ஜூலை 20

அமெரிக்க ஜனாதிபதி ரேகன் ஒரு நவீன ஹிட்லர். ஹிட்லரைவிட அவர் மோசமான சர்வாதிகாரி.

நிக்கரகுவா ஜனாதிபதி டானியல் ஒட்டேகா இப்படித் தெரிவித்தார்.

நிக்கரகுவாவில் சாடினிஷ்டா புரட்சி நடந்த ஏழாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் தொடர்பாக விடுத்த செய்தியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

நிக்கரகுவாவில் கம்யூனிஸ்ட் அரசுக்கு எதிராக செயற்பட்டுவரும் கிளர்ச்சியாளருக்கு 10 கோடி டாலர் உதவி வழங்குவது என அமெரிக்கா முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

அமெரிக்கா தனது முடிவை ஒருவார காலத்தினுள் மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல் இந்த விடயத்தை ஐக்கியநாடுகள் சபையின் கவனத்திற்கு நிக்கரகுவாவும் அதன் ஆதரவு நாடுகளும் கொண்டு வரும்- இப்படி ஒட்டேகா தமது செய்தியில்மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்காவின் நடவடிக்கைக்கு ஆவர்பலத்த கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க நடவடிக்கை மத்திய அமெரிக்க பிராந்தியத்தில் யுத்த அபாயத்தைத்தான் ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார். (உ)

‘காமன்வெல்த்’ விளையாட்டுக்கள்:

# 24 நாடுகள் பகிஷ்கரிப்பு

## பிரிட்டனுக்குப் பலத்த அடி

புதுடில்லி, ஜூலை 20

பிரிட்டனின் எடின்பரோ நகரில் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவிருக்கும் காமன்வெல்த் நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதில்லை என 24 நாடுகள் அறிவித்துள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற தகுதியுடைய 58 நாடுகளில் அரைவாசி பகுதியினர் தமது பகிஷ்கரிப்பை அறிவித்து விட்டனர்.

எஞ்சிய அரைவாசி நாடுகளில் பல இரண்டொரு தினங்களில்தமது பகிஷ்கரிப்பை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக பொருளாதார தடைகளை விதிப்பதற்கு பிரிட்டன் மறுத்து வருவதை ஆட்சேபித்தே இந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கை—

பிரிட்டனின் இறுதி நேர நடவடிக்கையைப் பொறுத்து இந்தியா தனது இறுதி முடிவை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டிகளில் பங்குபற்றும் இந்திய வீரர்கள் நேற்று லண்டன் புறப்படுவதாகஇருந்தது. எனினும் அதனை இந்தியா இறுதி நேரத்தில் ஒத்திவைத்தது.

காமன்வெல்த் விளையாட்டுகளை அந்த அமைப்பில் உள்ள பலநாடுகள் பகிஷ்கரிப்பது, பிரிட்டனின் வெளிவிவகாரக் கொள்கைக்கு விழுந்த ஒரு பலத்த அடியாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (உ)

## இலங்கை மீளாய்வு

லண்டன், ஜூலை 20

காமன்வெல்த் போட்டிகளில் பங்குபற்றுவது என்ற தனது முடிவை இலங்கை மீளாய்வு செய்து வருகிறது — இப்படி பி பி ஸி அறிவித்தது.

பல நாடுகள் அடுத்தடுத்து பகிஷ்கரிப்பு முடிவை அறிவித்து வருகின்றன. அதைத் தொடர்ந்தே இலங்கை தனது முடிவை மீளாய்வு செய்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## உற்பத்தி வரம்பு மீறப்பட்டது.

புதுடில்லி, ஜூலை 20

எண்ணை உற்பத்தி, ஏற்றுமதி நாடுகள் அமைப்பின் (ஒபெக்) விதித்த உற்பத்திக்கான வரம்புகளை உலகின் மிகப் பெரும் உற்பத்தி நாடான சவூதி அரேபியா மீறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில்நுட்ப விடயங்களில்

## பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவி

### ஒப்பந்தம் கைச்சாத்தானது

வாஷிங்டன், ஜூலை 20

அமெரிக்கா பாகிஸ்தானுடன் தொழில் நுட்ப ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறது.

ஒப்பந்தத்தின்படி பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கம்பியூட்டர் தொலைத்தொடர்பு சம்பந்தமான விடயங்களில் உயர் தொழில்நுட்ப உதவிகளை வழங்கும்.

இந்த உதவிகள் பாகிஸ்தானின்சர்ச்சைக்குரிய அணுகுண்டு தயாரிப்புத் திட்டத்திற்குப் பாவிக்கப்படாது என்று கடுமையான கட்டுப்பாட்டின் மத்தியிலேயே அமெரிக்காவால் இவ்வுதவி வழங்கப்பட்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் புதிய மக்கள் பிரதம மந்திரி மொகமட் கான் ஜுனேஜோ வாஷிங்டனில் தங்கியிருந்த போது இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதேவேளை, அணுக்குண்டை உற்பத்தி செய்வதில் பாகிஸ்தான் ஈடுபடுமானால் பாகிஸ்தானுக்கான அமெரிக்காவின் பாரிய இராணுவ, பொருளாதார உதவிகள் தடை செய்யப்படும் என அமெரிக்க ஜனாதிபதி றேகன் எச்சரிக்கை செய்திருக்கிறார். (உ)

வெளி உலகில்

## பக்தாத்தில் ஜோர்தான் மன்னர்

ஈராக்கிற்கும் சிரியாவுக்கும் இடையில் உள்ள பிணக்கைத் தீர்த்து வைக்கும் முயற்சியாக ஜோர்தான் மன்னர் ஹுசைன் பக்தாத் போய்ச் சேர்ந்தார்.

# யாழ். மாவட்டம் இருளில் மூழ்கும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபை மின்சாரக் கட்டணமாக சுமார் 2 கோடி ரூபாவை இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியிருக்கிறது.

இத்தொகை விரைவில் செலுத்தப்படாவிட்டால் யாழ் மாவட்டத்திற்குரிய மின்சார விநியோகம் விரைவில் துண்டிக்கப்படலாமெ என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலை ஏற்படுமானால் குடாநாடு முழுவதும் இருளில் மூழ்கும்

யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற "மின்சாரத் திட்டத்தினால் ஏற்படும் இழப்புகள்" பற்றிய கலந்துரையாடல் ஒன்றில் அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அபிவிருத்திச் சபை உதவிச் செயலாளர் திரு. எஸ். ரமநாதன், பிரதம கணக்காளர் திரு. கே. எம். இராஜேந்திரன், மின்சார அத்தியட்சகர்கள், அதிகாரமளிக்கப்பட்ட மின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

அங்கு தெரிவிக்கப்பட்ட முக்கிய தகவல்கள்:—

* சட்ட விரோத மின்பாவனையால்மாதாந்தம் சுமார் 15 லட்சம் ரூபா சபைக்கு நஷ்டமேற்படுகிறது.

* நல்லூர், தெல்லிப்பளை, காங்கேசன்துறை, மயிலிட்டி, உடுப்பிட்டி, உரும்பிராய், நெல்லியடி, சுன்னாகம், கோப்பாய், மானிப்பாய் ஆகிய உப அலுவலகங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோத மின்பாவனை அதிகமாகக் காணப்படுகிறது.

• சட்ட விரோத மின் பாவனையாளர்கள் மின்சாரத்தை ஒரே கம்பியால் எடுத்து அதனை ஒரு எல்லை [illegible] கிணறு போன்ற [illegible]ங்களில் புதைத்துத் தொடர்புபடுத்தி மின்சுற்றைப் பூர்த்தி செய்கிறார்கள்.

இதனால் உயிரிழப்பும், 24 மணி மின்சார இழப்பும், மின்கம்பிகளில் அதிக மின்சார பளுவும் ஏற்படுகின்றன.

தொழில் நுட்ப ரீதியிலும் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது

* மின்சார விநியோகத்தினால் அபிவிருத்தி சபைக்கு இதுவரை காலமும் கிடைத்து வந்த சிறிதளவு லாபமும் முற்றாக இழக்கப்பட்டு விட்டது.

இதனால் பல அபிவிருத்தி வேலைகள் ஸ்தம்பிதமடைந்திருக்கின்றன. (உ-5-16)

## நெடுங்கேணிப் பயங்கரம்: இரு விளக்கங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 21

கடந்த சனிக்கிழமை சஞ்சிகையில் வெளியான நெடுங்கேணி பயங்கரம் பற்றிய கட்டுரை தொடர்பாக சட்டத்தரணி திரு. கனகமனோகரன் மேலும் சில விளக்கங்களைத் தெரிவித்திருக்கிறார்:

பஸ்ஸின் முன் ஆசனத்தில் இருந்த மூன்றி நபர்களில் ஒருவரே சம்பவம் நடந்த இடத்திலே மரணமானார். மற்றவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும் வழியில் தான் மரணமானார்.

இருவரும் பஸ்ஸினுள்ளேயே சிதறிய நிலையில் இறந்திருக்கக் காணப்பட்டார்கள் என்று நான் கூறவில்லை.

இறந்தவர்களின் சடலங்களை எடுத்துவருவதற்கு முல்லைத்தீவில் இருந்து சென்ற பஸ்ஸின் நடந்த சம்பவங்களைப் பற்றிய தகவல்களை நான் தெரிவித்தது போல கட்டுரை அமைந்திருக்கிறது. அது தவறு. அது வேறு ஒருவரால் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என நினைக்கின்றேன்.

இப்படி திரு. மனோகரன் சுட்டிக் காட்டியுள்ளார் (உ)

ஜி.சி.ஈ. (உயர்தரம்)

# திட்டமிட்டபடி வடக்கில் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 21

அடுத்த மாதம் முதலாம்திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சி. ஈ (உயர் தர) பரீட்சைகள் திட்டமிட்டபடி வடக்கில் நடக்கும் என்று கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் கொழும்பு சென்று பரீட்சைக்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனித்திருக்கிறார்.

யாழ் கல்வித் திணைக்களம் சகல நேரசூசிகளையும், அனுமதி அட்டைகளையும் கொழும்பிலிருந்து பெற்று சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பியுள்ளது.

இப்பரீட்சைக்காக யாழ் மாவட்டத்தில் 24 பாடசாலைகளில் 62 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. (உ-5)

## யாகப்பர் ஆலயம் 125 ஆவது ஆண்டு நிறைவு

### குருநகரில் சிறப்பான விழா

யாழ்ப்பாணம், ஜூலை 21

குருநகர் புனித யாகப்பர் ஆலய திருநாள் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

கோயில் ஸ்தாபிக்கப்பட்டு 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இணைந்து கொண்டாடப்படுகிறது

தினமும் நவநாள் திருப்பலிகளும், அருள் உரைகளும் இடம்பெறுகின்றன.

இம்மாதம் 25 ஆம் திகதி காலை யாழ் ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் திருநாள் பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

பங்குமக்களை எளிய முறையில் சிறப்பாக கொண்டாடும்படியும் தமிழ் மக்களின் இன்னல்களுக்காகவும், இழந்த இறைமையை மீட்கவும் இறைவனை இறைஞ்சுமாறும்; பங்குத் தந்தை அருந்திரு பீற்றர் துரைரட்ணம் கேட்டுக்கொண்டுள்ளார். (உ-5)

### அலுவலகம் மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 21

[illegible] அபிவிருத்தி அமைச்சின் யாழ் மாவட்ட அலுவலகம் மீண்டும் இயங்கவுள்ளது.

யாழ் தேசிய வீடமைப்புத் திணைக்கள அலுவலகத்தின் ஒருபகுதியில் இதன்வேலைகள் முன்னர் நடைபெற்று வந்தன. (உ-5)

சமய நிகழ்ச்சிகளில்

## சுமங்கலி பூஜை

யாழ்ப்பாணம், ஜூலை 21

வண். வட மேற்கு கொக்குவில் ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தில் இன்று மாலை 5.30 மணிக்கு திருவிளக்குப் பூஜை (சுமங்கலி பூஜை) நடைபெறும்.

இம்மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை வருடாந்த அலங்கார உற்சவங்கள் ஆரம்பமாகவுள்ளன. ஆகஸ்ட் எட்டாம் திகதி ஆடிப்பூரத்தன்று தீர்த்தோற்சவமும் 9 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறும். (ஒ)

## நயினாதீவு கந்தசாமி தீர்த்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 21


நயினை ஸ்ரீ காட்டுக்கந்தசாமி ஆலய ஆடிவேல் தீர்த்தோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும். மகேசுவர அன்னதானமும் இடம்பெறும். (உ-ஒ)

## நீர்வேலியில் கதிர்காம உற்சவம்

நீர்வேலி, ஜூலை 21

நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காமசுவாமி ஆலய வருடாந்த உற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

கதிர்காம உற்சவங்களை ஒட்டி நடைபெறும் இவ்வாலய விழாக்கள் நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவத்துடனும் புதன்கிழமை திருக்கல்யாணத்துடனும் நிறைவுறும். (உ-ஒ-110)



குறள்:
தன்னைத்தான் காதலனாயின் எனைத்
தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

பொருள்:
ஒருவன் தன்னைத்தான் விரும்பி வாழ்பவனாயின், தீய செயலாகிய பகுதியை எவ்வளவு சிறியதாயினும் பொருந்தாமல் விடவேண்டும்.

## உலக நிலைமை: போதிய உணவுற்பத்தி; ஆனால் பல நாடுகளில் இன்னும் பற்றுக்குறை

யாழ்ப்பாணம், ஜூலை 21

உலக மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய உணவிலும் பார்க்க பத்து சதவீதம் அதிக உணவு உலகில் விளைவிக்கப்படுகிறது. ஆனாலும் உலகின் பல பகுதிகளிலும் உணவுப் பற்றுக்குறை நிலவுகிறது.

திருநெல்வேலி விவசாய நிலையத்தில் நடைபெறும் போஷாக்கு பற்றிய இருவாரக் கருத்தரங்கில் உரையாற்றியபோது யாழ் திட்டமிடல் சிரேஷ்ட கூறவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

திட்டமிடல் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கருத்தரங்குக்கு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் தலைமை வகித்தார்.

திருமதி கணேந்திரன் தொடர்ந்து கூறியதாவது:

உலகில் மொத்தமாகப் பயிராகும் உணவு உலக மக்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. ஏன், பத்து வீதம் தேவைக்கு மேலதிகமாகவும் உள்ளது.

எனினும் உணவுப் பற்றுக்குறை உலகெங்கும் நிலவுகிறது. தேவைக்கு ஏற்பப் பங்கிடப்படாமையே இப்பிரச்சினைக்குக் காரணம்.

உண்மையிலே உலகில் சகலருக்கும் உணவு வழங்க முடியும்.

சகலருக்கும் உணவு வழங்கக் கூடிய திட்டம், அரசியல் நிலைப்பாடு நாடுகளில் உருவாக்கப்படவில்லை—என்றார். (உ-9)

வித்தாரம்

என்ன, முரளி யார் போன புதன்கிழமை நடந்த லொறிச் சேவை சங்கங்களின்ர பேரணியும்,ஹர்தாலும் கொஞ்சமாவது வேலைசெய்திருக்குப் பார்த்தியே.

பிரயாணிகள் போற பஸ்ஸுகளுக்குப் பாஸ் எடுக்கத் தேவையில்லை எண்டு சொன்னதுக்க பொருள்களை ஏற்றிக்கொண்டுபோற லொறியள் சாமான்களோடை பலாலிக்குப்போய் சோதிச்சபிறகுதான் பயணத்தைத் தொடங்க வேணும் எண்ட விதியும் தளர்த்தப்பட்டுப் போச்சு. சாமான்களை ஏத்திக்கொண்டு, போற வழியில உள்ள முதலாவது முகாமில சோதிக்கலாம் எண்டு சொல்லியாச்சு!

யாழ் குடாநாட்டுக்கு அப்பால் போகும் வாகனங்கள் கொழும்பு செல்லும்வரை உள்ள எல்லாப் படை முகாம்களிலையும் சோதனைக்கு உள்ளாகவேணும் எண்ட விதியும் ரத்தாய்ப் போச்சு. ஒரு முகாமில சோதிச்ச பத்திரம் பெற்றுப் போதும் எண்டு சொன்னுச்சு.

லொறிக்காரருக்கு எவ்வளவோ நிம்மதி. உதே மாதிரி எரிபொருள் எடுத்துவாறதையும் சுகமாக்கிவிட்டினம் எண்டா நல்லது. ரயிலும் வவுனியாமட்டும் வருகுது. அதையும் யாழ்ப்பாணம் வரைக்கும் கொண்டுவரலாம் எண்டு மேலிடம் யோசிக்குதாம்.

திடீர் திடீரெண்டு கட்டுப்பாடுகளைத் தளர்த்திக்கொண்டு வடக்கில படைபலத்தை நாளாந்தம் அதிகரிச்சுக்கொண்டிருக்கினம். சோழியன் குடுமி சும்மா ஆடாது தம்பி

கட்டுப்பாடுகளை லேசாத் தளர்த்திப் போட்டு, வேறை ஒரு பக்கத்தால இறுக்கிப் பிடிக்கிறபோசினை இருக்கும்.

அரசியல் மாநாடு, பேச்சுவார்த்தை எண்டு நடக்கையிக்கையே படையள் தமிழரை கொன்று குவிக்குதுகள் அதோடை நேர்க்கோடு போட்டுப் பார்த்தால் மாநாடு சரிவராதெண்டா தமிழ்ப் பகுதிகளையே துவம்சம்பண்ண எண்ணியிருக்கினமோ ஆருக்குத் தெரியும். ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

நெடுங்கேணியில இ. போ. ச. பஸ்மீது ஹெலிக்கொப்டர் சுட்டுத் தமிழ்ப் பயணிகள் செத்தது' இந்த நாட்டில் அதிஉத்தமருக்கு உடனை தெரியாதாம். அப்ப அவர் முப்படைகளின் தலைவர் எண்டு இருந்து என்ன பிரயோசனம்?

நாட்டின்ரை எந்த மூலையில் எண்டாலும் ஒரு சிறு அசம்பாவிதம் நடந்தாலும் கூட அது அவருக்கு உடனுக்குடனை தெரிய வேணும். ஹொட்லையின் ரெலிபோனுகள் அது இது எண்டு எல்லாத்துக்கு வைச்சிருக்கினம்.

உண்மையில தான் அவருக்குத் தெரியாதெண்டா, இழை இருக்கிற அதிகாரியள் அவரை லேசப்பட்டவராக எடுக்கினம் எண்டு தான் சொல்ல வேணும். அது அவருக்கே ஆபத்தாகி விடும். இல்லாட்டால் அவருக்குத் தெரிய வேண்டிய தகவல் எல்லாம் பத்தோடு பதினொன்றாகப் போய் கயிறு திரிச்சுப் பிறகு 'ஸ்கிரீன்'' பண்ணிப்போக நேரம் பிடிக்குதோ. எல்லாம் பெரிய இடத்துச்சமாச்சாரங்கள்

ஆனால் தமிழரை ஆமி கொல்ல, அது தெரியாது எண்டு ஜனாதிபதி ஒருவர் சொல்லுறது பெரிய பெய்க்காட்டல் எண்டது மட்டுமில்லை சீரியஸான விஷயமும்கூட.

தமிழரைப்பற்றி அவருக்கு அக்கறை இல்லை எண்டதையும் அது ஒரு விதமாய் நிரூபிக்குது இல்லையே...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிபோன் ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை
(எல்லா நாட்களும்)
அமைதியான, பாதுகாப்பான இடம்
இரவில் தங்குவதற்கு அறைகள்
நியாயமான கட்டணங்கள்
Safe, Convenient Vehicle Parking
Mack Communications & Travels
1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele; 24791, 24836

# உதயன்

21 07 1986 திங்கட்கிழமை

வெளிநாட்டுப் பிரயாணம்
★ துரித ஒழுங்குகள்
★ சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
★ Confirmations, Re-confirmations
★ பாஸ்போட், விசா, பொன்ட்
நம்பிக்கையைப் பெற்றவர்கள்
Mack Communications & Travels
1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele: 24791, 24836

# மாகாண சபை

# தமிழர் அபிலாஷைகளை

# பூர்த்தி செய்யாது

## இணைப்புக்குழு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 21

மாகாணசபைத் தீர்வு தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாது.

இப்படி தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்துக்கான இணைப்புக் குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைத் தீர்வு என்ற பெயரில் அரசு தனதுஇராணுவ ரீதியில் பலப்படுத்திக்கொள்வதற்கு இட்டமிட்டுச்செயற்படுகிறது.

மாகாண சபைத் திட்டத்தை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும் போது, எந்த ஒரு நாட்டிலும் போர் நிறுத்தம் அமுலில் இருக்கும்.

ஆனால் இலங்கையில் பேச்சுக்கள் நடைபெறும் போதே அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகள் நாற்றுக் கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் தமிழ்ப்பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்களுக்கு தென்னிலங்கையில் இருந்து மேலதிக இராணுவம் கொண்டுவந்து குவிக்கப்படுகிறது.

எமது இணைப்புக் குழுவினால் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணப்படவேண்டும்.

உண்மையிலே தீர்வு காண அரசு விரும்பினால் விடுதலைப் போராளிகளுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் அதுவே பலனுள்ள தீர்வுக்கு வழி வகுக்கும்.

இப்படி இணைப்புக்குழுவின் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## பருத்தித்துறையில் சிப்பாய்களுடன் மோதல்

பருத்தித்துறை, ஜூலை 21

பருத்தித்துறை இராணுவ, பொலீஸ் கூட்டு முகாமிலிருந்து சனிக்கிழமை காலை பத்து மணியளவில் வெளியே வந்த ஐப்பதுக்கும் மேற்பட்ட சிப்பாய்களுடன் ஈ. பி. ஆர். எல். எவ் போராளிகள் நேரடியாக மோதினர்.

இதனையடுத்து சிப்பாய்கள் முகாம் திரும்பினர். சிப்பாய்கள் முகாமுக்கு அருகிலிருந்த வீடுகளை எரித்ததாகவும் கூறப்படுகிறது.

சிப்பாய்கள் முகாம் திரும்பியதை அடுத்து அங்கிருந்து சுப்பர்மடம், தம்பசெட்டி ஆகியபகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் தம்பசெட்டியைச் சேர்ந்த விசுவநாதர் சந்திரகுமார் (வயது 11) என்ற சிறுவன் காயமடைந்தான். (உ-118)

## கரை ஒதுங்கிய

# இந்திய மீனவர்

## இன்று கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 21

இந்திய மீனவர் கணபதி இன்று கொழும்பு செல்வார்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. ஹார்டிப்பூரி விசேட விமானம் மூலம் இன்று காலை பலாலி விமான நிலையத்தை வந்தடைவார்.

இவரை அழைத்துவர யாழ் உதவிஅரச அதிபர் உட்பட செயலகஅதிகாரிகள் சிலர் இன்று பலாலி விமான நிலையத்திற்குச் செல்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய மீனவர் கணபதி திரு. பூரியுடன் இன்றே கொழும்பு திரும்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை திரு. பூரி இந்திய மீனவர் சடலங்கள் கரைஒதுங்கிய இடங்களையும் அவை தகனம் செய்யப்பட்ட இடங்களையும் சென்று பார்வையிடுவார் எனவும் தெரியவருகிறது. (உ-10)

## பால்மா வகைகளுக்கு

## யாழ் குடாநாட்டில்

## தட்டுப்பாடோ அல்லது

## விலையேற்றமோ இல்லை

சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின் பிரகாரம் பால்மா வகைகளுக்கு தட்டுப்பாடோ அல்லது விலையேற்றமோ இல்லை.

எரிபொருள்களின் விலையேற்றம் காரணமாக, வான் மூலம் தனியார் விற்பனை நிலையங்களுக்கு ஒழுங்கான விநியோகம் செய்வது தடைப்பட்டமைக்கு மனம் வருந்துகிறோம். இருந்தும் இக்கட்டான போக்குவரத்து சிரற்ற நிலையிலும் — தேவையான பால்மா வகைகளை உற்பத்தியாளர்களின் குறிக்கப்பட்ட விலையில் — பாவனையாளர்கள் எங்களின் ஸ்தாபனத்திலும் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
பாவனையாளர்களின் நலன் கருதும்,
S V.M.ஸ்தாபனத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 21—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 86.

## முதலாவது பெண் தோன்றியது எங்கே?

அட்லாண்டா, ஜூலை 20

முதலாவது பெண் ஆசியாவில் தான் தோன்றினள்!

மனித வர்க்க சாஸ்திரவியல் ஆராய்ச்சியாளர்களின் புதிய கண்டுபிடிப்பு இது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் முன்னர் கூறியது போன்று ஆபிரிக்காவில் முதலாவது பெண் தோன்றவில்லை.

ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற — முதலாவது பெண்ணின் தோற்றம் பற்றிய — சம்பவங்கள் குறித்து ஆராய்ச்சியை அட்லாண்டாவில் உள்ள எமொரி பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் டக்ளஸ் வாலஸ் மேற்கொண்டிருந்தார்.

உலகில் முதல் பெண் ஆசியாவில் தான் தோன்றினள் என்று தமது ஆராய்ச்சியின் முடிவில் அவர் கூறியுள்ளார். (உ-எ)

## உடும்பன்குளம் பகுதியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 21

கோமாரி, வருவல இராணுவ முகாம்களில் இருந்து வாகனங்களிலும், நடைபவனியாகவும் புறப்பட்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உடும்பன்குளம் பகுதியில் ரோந்து வந்த சமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் இடைமறித்து தாக்கினர்.

காலை 11 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலினால் இருதரப்பினருக்கும் இடையில் பலத்த மோதல் இடம்பெற்றது.

இதன்போது இராணுவத்தினர் சிலர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர்.

நிலை கொள்ளமுடியாது முகாம் திரும்பிய சிப்பாய்கள் வழியில் 55 வயதுடைய இரு ஆண்களை வெட்டிக் கொன்று பின்னர் வீடொன்றினுள் போட்டு எரித்தனர்.

இத்தாக்குதலில் எமது தரப்பில் எதுவிதமான இழப்புகளும் ஏற்படவில்லை

— இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர். (உ-7)

## சாதனை வாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

சுவாமி சிவானந்தரின் புண்ணிய திதி இம்மாதம் 30ஆம் திகதி நல்லூர் திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்றுமுதல் இம்மாதம் 30ஆம்திகதிவரை சாதனை வாரமாகக் கடைப்பிடிக்கப்படும்.

இப்பத்துத் தினங்களும் பூஜை பஜனை, அருளுரைகள் இடம்பெறும். (உ-எ)

## இன்று நடப்பவை

## பயிற்சி நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 21

பெண்களுக்கான நடமாடும் பயிற்சி நிலையம் ஒன்று கரும்பராய் மேற்கு திருக்குமரன் சனசமூக நிலையத்தில் இன்று திறந்து வைக்கப்படும்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் இன்று காலை 8 15 மணியளவில் இந்நிலையத்தைத் திறந்து வைப்பார்.

இந் நிகழ்ச்சிக்கு சனசமூக நிலையத் தலைவர் திரு பா. சந்திரன் தலைமை வகிப்பார். (உ-10)

## பஸ், லொறி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''பாஸ்'' பிரச்சினை காரணமாக நிறுத்தப்பட்டிருந்த இச் சேவைகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஐந்துக்கும் மேற்பட்ட பெரிய பஸ்கள் பயணிகளுடன் நேற்று கொழும்பு சென்றன. (உ-10)

## 251 தமிழ்க் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர்; அவர்கள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

பிணை கிடையாது

★ குற்றம் சுமத்தப்படுபவர்கள் எக்காரணம் கொண்டும் பிணையில் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

★ தமிழ்ச் சட்டத்தரணிகள் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்படும். மாதமுடிவுக்குள் இது பற்றி உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்.

★ குற்றம் சுமத்தப்படுபவர்கள் விசேட நீதிமன்றங்களில் விசாரிக்க வழி செய்யப்படும்.

★ குற்றம் சுமத்தப்பட தேவையான ஆதாரங்கள் இல்லாதவர்கள் என்று கருதப்படும் இருபதொருபேர், சட்டமா அதிபரின் பதில் கிடைத்தவுடன் விடுதலை செய்யப்படுவர்.

★ சிறையினுள் சித்திரவதை செய்யப்படுவதாகக் கூறப்படும் முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தப்படும். காரணம்

★ பெரும்பாலானவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாது இருப்பதற்குக் காரணம், இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கும் வெலிக்கடையில் உள்ள கைதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக வெளிவந்துள்ள தகவல்கள்

இதேவேளை வெலிக்கடைச் சிறையில் உள்ள 251 தமிழ்க் கைதிகளுக்கும் வழங்கப்பட்டு வந்த பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு காரணங்களுக்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக உதயனுக்குத் தெரிய வந்தது

1. கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறின் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக தமிழ்க் கைதிகள் அறிவித்து இருப்பதால் ஏற்பட்டுள்ள பதற்றநிலை.

2. வெலிக்கடைச் சிறையில் குட்டிமணி, ஜெகன்,தங்கத்துரை உட்பட பல தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்ட நினைவு தினம் இம்மாதம் 25ஆம் திகதி வருகிறது. [illegible] ... ஆஜர் [illegible] விருக்கின்றனர். (அ-எ-6)

## கல்விப் பணிப்பாளருடன் சந்திப்பு

திருநெல்வேலி செங்குந்தா இந்துக்கல்லூரியில் அடுத்த ஆண்டு முதல் மீண்டும் ஆரம்ப வகுப்புகளைத் தொடங்குவதற்கு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் இராசுந்தரலிங்கம் அனுமதி வழங்கியுள்ளார்.

அண்மையில் அவரது காரியாலயத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது கல்லூரியின் வளர்ச்சி சம்பந்தமான பல விடயங்கள் ஆராயப்பட்டன.

கல்லூரியின் சார்பில் அதிபர் திரு. ம சண்முகலிங்கம், உபஅதிபர் திரு. மு. பரமேஸ்வரன், பழைய மாணவர்மன்றத் தலைவர் திரு. க. பராஜசிங்கம், உபதலைவர் திரு உஸ். திருச்செல்வம், பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் திரு ப. ஜீவரத்தினம் ஆகியோர் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

க பொ த உயர்தரப் பரீட்சைக்காக மனையியல், அரசியல் ஆகிய பாடங்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டது

இந்தச் சந்திப்பின் போது நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தியும் சமுகமாயிருந்தார். (உ-10)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரை கண்டுபிடிக்கப் பதிவேடு

யாழ்ப்பாணம், ஜூலை 21

சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெறுவோருக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படவுள்ளது.

சட்ட விரோத மின் பாவனையாளரைத் தண்டிப்பதற்கு பொது மக்களும் பொது ஸ்தாபனங்களும் உதவி செய்ய வேண்டும் என்று மாவட்ட அபிவிருத்திச் சபை உதவிச் செயலாளர் திரு எஸ் பரமநாதன் கேட்டுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது;

சட்ட விரோத மின் பாவனையாளர்களை பிடிப்பதற்கென மின்சார சபை ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படவுள்ளது.

அவர்கள் பற்றிய தகவல்களை பெறுவதற்கென ஒவ்வோர் உப அலுவலகத்திலும் ஒரு பதிவேடு வைக்கப்பட்டிருக்கும். பொது மக்கள் இதில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் பற்றிய குறிப்புகளை பதிந்து உதவ வேண்டும்.

சட்ட விரோதமாக மின்சாரம் பாவித்துக் கண்டு பிடிக்கப்படுபவர்கள் மீது வழக்கு தொடரப்படும்.

மண்ணெண்ணை முத்திரை வைத்துள்ளவர்களிடம் அவை பறிமுதல் செய்யப்படும்— என்றார். (அ-5)

## பாடசாலை --

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

யது அவசியமானதும், அவசரமானதுமாகும்.

மக்களை வழி நடத்திச் செல்வதில் முன்னிற்கும் ஆசிரியர் சமுதாயம் இத்தகைய போராட்டங்களில் முன்னின்று செயற்படுவதும் தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

வெள்ளிக்கிழமை அன்று பாடசாலைக்குச் செல்லாமலும், அதற்கான உத்தியோக பூர்வமான அறிவித்தல் எதையும் கொடாமலும் இன்று தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழுவினால் ஒழுங்கு செய்யப்படும் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அனைத்துத் தமிழ் ஆசிரியர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

இப்படி திரு. மகாசிவம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## பலாலி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை தவிர்க்கவே இப் புதியஏற்பாடு.

பலாலியில் உள்ள சத்திர சிகிச்சை நிலையத்தில் இரண்டு சத்திர சிகிச்சை [illegible] ... பலர் [illegible] ... ஒன்றனர். (உ-எ.6)

## சுருவில் ஊடாகவும் பஸ் சேவை

ஊர்காவற்றுறை, ஜூலை 21

ஊர்காவற்றுறை தனியார் போக்குவரத்துக் கழகம் தனது சேவையை சுருவில் கிராமத்தினூடாகவும் நடத்த ஆரம்பித்துள்ளது.

இதுவரை காலமும் இப்பாதையால் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை மாத்திரமே இடம் பெற்றது தீவுப் பகுதிக்கான வீதிப் போக்குவரத்துத் தடைப்பட்டதும் இச்சேவையும் தானகவே இடை நிறுத்தப்பட்டது.

இப்போது சுருவில் கிராமத்தின் பொது ஸ்தாபனங்களின் வேண்டுகோளின் பேரில் சேவை நடைபெறுகிறது (உ-16)

## வல்வெட்டிக்கு இடம் மாற்றம்

வல்வெட்டி, ஜூலை 21

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி உடுப்பிட்டியில் இருந்து வல்வெட்டிக்கு மாற்றப்படவுள்ளது.

வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்த மக்கள் வங்கிக் கட்டடம் சேதமடைந்ததினால் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கக் கட்டடத்தின் ஒரு பகுதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன் மாற்றப்பட்டது

இந்தத் தற்காலிக அலுவலகத்தை வல்வெட்டித்துறை, வல்வெட்டி மக்களின் நலன் கருதி வல்வெட்டியில் பழைய பொலீஸ் நிலைய ஒழுங்கைக்கு முன்பாக அமைந்துள்ள வர்த்தகர் ஒருவரின் கட்டடத்திற்கு மாற்றுவது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (உ-70)

# சுன்னாகத்தில்

## உதைபந்தாட்டம் 20 அணிகள் மோதுகின்றன

அக்சவெலி, ஜூலை 21

யாழ். மாவட்டத்தில் சிறந்த 20 விளையாட்டுக் கழக அணிகள் பங்குபற்றும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று சுன்னாகத்தில் நடைபெற்று வருகிறது

சரஸ்வதி சனசமூக நிலைய கட்டட நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இப்போட்டிகள் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் 'நொக்—அவுட்' அடிப்படையில் நடைபெற்று வருகின்றன

சுன்னாகம் தெற்கு, கல்லாகட்டுவன் சிங்கமாப்பாணர் மைதானத்தில் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. (உ-11)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம். ஜூலை 21

சுன்னாகம் சந்தரோடை சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகத்தின் 5ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டும் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காகவும் விளையாட்டுப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டம், கரம்,டாம், டார்ட்ஸ் ஆகிய விளையாட்டுக்கள் இடம்பெறும் 'நொக் அவுட்' முறையில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றலாம்.

இந்த விளையாட்டுப் போட்டிக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 3ஆம்திகதிக்கு முன்னர்— தி சின்னராசா, செயலாளர், சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகம், சந்தரோடை, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். (உ-7)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 21

தோமஸ்—சேரு ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

7 பேர் பங்கு கொள்ளும் 12 ஓவர்களைக் கொண்ட ஆட்டங்களின் அடிப்படையில் ''நொக் அவுட்'' முறையில் இந்தப் போட்டிகள் நடத்தப்படும்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 27 ஆம் திகதியாகும்

விண்ணப்ப படிவங்களுக்கும் மேலதிக விவரங்களுக்கும் ஜெ ஜெயகாந்தன், செயலாளர் புளூடைமன்ஸ் விளையாட்டுக்கழகம். 44 ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் (உ-7)

## சென்றலைட்ஸ் வெற்றிக் கிண்ணம்

## இறுதிச் சுற்றுக்கு மூன்று அணிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 21

''சென்றலைட்ஸ்'' வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதிச்சுற்றில் பங்கு பற்றுவதற்காக மூன்று அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் இப் போட்டியில் பின்வரும் அணிகள் சிறந்த மூன்று அணிகளாகத் தெரிவாகியுள்ளன:-

யாழ்ப்பாணம், சில்வர் ஸ்ராரீஸ் விளையாட்டுக் கழக அணி, மல்லாகம் விளையாட்டுக் கழக அணி, யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி.

நேற்றும், நேற்று முன்தினமும் நடை பெற்ற சிறந்த மூன்று அணிகளைத் தெரிவு செய்வதற்கான மூன்று ஆட்டங்களில்—

சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகஅணி இணுவில் ''கலையொளி'' விளையாட்டுக் கழக அணியை இன்னிங்ஸால் தோற்கடித்தது.

மல்லாகம் விளையாட்டுக் கழக அணி கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணியை 5 விக்கெட்டுக்களினால் வென்றது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி,ஈச்சமோட்டை சனசமூக நிலைய அணியை முதல் இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வென்றது

இறுதிச் சுற்றில் மும்முனைப் போட்டிகளில் ஈடுபட்டு அதில் கூடுதலான புள்ளிகளைப்பெறும் முதல் இரண்டு அணிகளும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் (உ-7)

## உதயன் - சஞ்சீவி

### சந்தா விவரம்

உள்நாடு

| காலம் | உதயன் | சஞ்சீவி | உதயனும் சஞ்சீவியும் |
|---|---|---|---|
| | ரு ச | ரு ச | ரு ச |
| ஒரு வருடம் | 313 00 | 104 00 | 417 00 |
| "6 மாதம் | 156-50 | 52 00 | 208 50 |
| 03 மாதம் | 78 50 | 26 00 | 104 50 |

அஞ்சல் செலவு உட்பட

| காலம் | ரு ச | ரு ச | ரு ச |
|---|---|---|---|
| ஒரு வருடம் | 469 50 | 156-00 | 625 50 |
| "6 மாதம் | 234-75 | 78 00 | 312 75 |
| 03 மாதம் | 117-50 | 39-00 | 156-50 |

சந்தா விவரங்கள் மாற்றத்திற்குரியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org